DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 54/2023

Prosecution witness PW - 3

| | | |
|---|---|---|
| Name | …. | முத்து |
| Father's Name | .... | ரங்கநாதன் |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 13th day of March 2026.

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் எங்கள் ஊருக்கு பக்கத்து ஊரை சார்ந்தவர்கள். நான் முத்து ஓட்டல் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 3 வருடத்திற்கு முன்பு நாவல்பாக்கம் கூட்ரோடு அருகே என் முத்து ஓட்டல் கடையில் நான் இருந்த போது சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது அடித்ததை நான் பார்க்கவில்லை, ஒரு தம்பிக்கு ரத்தம் வருவதைகண்டு நான் விலக்கிவைத்தேன். புதுக்கோட்டை சேர்ந்த நபரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி பெற்றதின் பேரில்)

நான் நாவல்பாக்கம் டாஸ்மார்க் அருகில் ஓட்டல் கடை அருகே தொழில் செய்துவருகிறேன். கடந்த 27.11.2022 அன்று மாலை சுமார் 6.00 மணியளவில் வழக்கம் போல் கடையில் நானும், சமையல் செய்யும் எல்லப்பன் என்பவரும்

சமையல் செய்து கொண்டு இருந்தபோது, அந்த வழியே வந்த விக்ரமன் அவரது நண்பர்கள் குறளரசன், அன்பரசன்,எழில் ஆகியோர் நாவல்பாக்கம் மதுபான கடை அருகில் நின்று இருந்தார்கள். அப்போது புதுக்கோட்டை சேர்ந்த விக்ரமன், கௌதமனை பார்த்து நலம் விசாரிக்கவே இங்கு ஏண்டா வந்தீங்க தேவிடியா பையா என்று திட்டி, அருகில் இருந்த ஓட்டல் அடுப்பில் எறிந்து கொண்டிந்த வேப்ப மரம் உருட்டு கட்டையை எடுத்து கௌதம் என்பவர் விக்ரமன் தலை, தோள்பட்டை மற்றும் முதுகின் மீது இதோடு ஒழிந்து போடா என்று அடித்தார். கௌதம் அவரது நண்பர் ஆனந்தராஜ் சேர்ந்து அருகில் எறிந்து கொண்ட குப்பையில் கௌதம் என்பவரை தள்ளிவிட்டனர். அங்கிருந்த நானும், எல்லப்பன் ஆகியோர் சண்டைய விலக்கிவிட்டோம். கௌதம் வேப்ப மரக்கட்டையை போட்டுவிட்டு ஓடிவிட்டார். விழுந்து கிடைந்த விக்ரமனை அவரது நண்பர்கள் குறளரசன், அன்பரசன் தூக்கி பார்த்த போது விக்ரமனுக்கு இடது தொடையில் தீ காயம் ஏற்பட்டிந்தது. விக்ரமின் அம்மாவிற்கு அவரது நண்பர்கள் தகவல் சொல்ல அவரும் அங்கு வந்து செய்யாறு, அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். மேற்படி உண்மை சம்பவங்களை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இல்லை

Taken down by me in open Court and read over / interpreted to the witness in the presence of the accused and admitted by him / her to be correct.

Sd/- N.Suresh
**Assistant Sessions Judge,**
**Cheyyar.**